## நவம்பர்– 05 – திங்கள்

**புனித பெர்த்தில்யா**

**ஆண்டவரே! என் உள்ளத்தில் இறுமாப்பு இல்லை: என் பார்வையில் செருக்கு இல்லை: திபா. 131:1**

### முதல் வாசகம் : பிலிப்பியர் 2 : 1 - 4

சகோதர சகோதரிகளே, கிறிஸ்துவிடமிருந்து நீங்கள் ஊக்கம் பெற்றுள்ளீர்களா? அன்பினால் ஆறுதலும், தூய ஆவியினால் தோழமையும் பரிவுள்ளமும் இரக்கமும் கொண்டுள்ளீர்களா? அப்படியானால் நீங்கள் ஒரே எண்ணமும் ஒரே அன்பும் ஒரே உள்ளமும் கொண்டவராய்த் திகழ்ந்து, ஒரு மனத்தவராயிருந்து என் மகிழ்ச்சியை நிறைவாக்குங்கள்.கட்சிமனப்பான்மைக்கும் வீண் பெருமைக்கும் இடம் தரவேண்டாம். மனத்தாழ்மையோடு மற்றவர்களை உங்களிலும் உயர்ந்தவராகக் கருதுங்கள்.நீங்கள் யாவரும் உங்களைச் சார்ந்தவற்றில் அல்ல, பிறரைச் சார்ந்தவற்றிலேயே அக்கறை கொள்ளவேண்டும்.

**பதில்பாடல் :** என் நெஞ்சம் அமைதி பெற உம் திருமுன் வைத்துக் காத்தருளும்

### நற்செய்தி : லூக்கா 14 : 12 – 14

அக்காலத்தில் தம்மை விருந்துக்கு அழைத்தவரிடம் இயேசு, ”நீர் பகல் உணவோ இரவு உணவோ அளிக்கும்போது உம் நண்பர்களையோ, சகோதரர் சகோதரிகளையோ, உறவினர்களையோ, செல்வம் படைத்த அண்டை வீட்டாரையோ அழைக்க வேண்டாம். அவ்வாறு அழைத்தால் அவர்களும் உம்மைத் திரும்ப அழைக்கலாம். அப்பொழுது அதுவே உமக்கு கைம்மாறு ஆகிவிடும்.மாறாக, நீர் விருந்து அளிக்கும்போது ஏழைகளையும்இ உடல் ஊனமுற்றோரையுமஇ கால் ஊனமுற்றோரையுமஇ பார்வையற்றோரையும் அழையும்.அப்போது நீர் பேறுபெற்றவர் ஆவீர். ஏனென்றால் உமக்குக் கைம்மாறு செய்ய அவர்களிடம் ஒன்றுமில்லை. நேர்மையாளர்கள் உயிர்த்தெழும்போது உமக்குக் கைம்மாறு கிடைக்கும்” என்று கூறினார்.

**தியானம்:** உறவுகளின் நெருக்கம் குறைந்து விரிசல் அதிகமாகிக் கொணடிருக்கின்ற உலகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இங்கு உறவுகளுக்கு முக்கியத்துவம் இல்லை. பணக்கார உறவு என்றால் அவர்களை தாங்கிப் பிடிக்கின்றோம். அவர்களின் வீட்டில் ஒன்று என்றாலும் ஓடிப்போகின்றோம். ஆனால் ஏழை எளியவர்களை நமது உறவு என்று சொல்வதற்கே வெட்கப்படுகின்றோம். அவர்களை ஒதுக்கிவைக்கின்றோம். அப்படிதான் இந்த உலகம் நமக்கும் நம் சந்ததியினருக்கும் கற்றுக்கொடுத்து கொண்டிருக்கின்றது. இதிலிருந்து மீண்டு வர நமக்கு இன்றைய வார்த்தைகள் அழைப்புவிடுகின்றன. இயேசு எளியோரை வறியோரையும் ஏழைகளின் வாழ்வினை முன்னேற்றுவதற்கும் அழைப்புவிடுக்கின்றார் என்பதை நற்செய்தியாளர் தெளிபடுத்துகின்றார். ஏன் ஏழைகளை மையப்படுத்த வேண்டும்? ஏன் அவர்களுக்கு உதவி செய்வதில் அதிக அக்கறை கொள்ளவேண்டும் ஏனென்றால் நாம் செய்யகூடிய உதவிகள் கைமாறு கருதாமல் செய்யப்பட வேண்டிய ஒன்றாக இருக்கவேண்டும். தேவையை கருத்தில் கொண்டு எதையும் எதிர்பாராமல் செய்யப்பட வேண்டிய ஒன்றாக இருக்கவேண்டும். நமது வாழ்வில் ஏழைகளுக்கு உதவி செய்வதற்கு முன்னுரிமை கொடுக்கின்றோமா? அவர்களின் வாழ்வில் ஒளியேற்ற முயற்சி எடுக்கின்றோமா? ஏழைக்கு உதவி செய்கின்றபோது அது கடவுளுக்கு கடன் கொடுக்கின்றோம் என்பதனை நமது உள்ளத்தில் பதித்து நமது வாழ்வை அமைத்துகொள்வோம் ஆமென்.